Koviloor Digital Library



927

KMM0927.

    

ஸ்வாமி

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீ ரகுவீரகத்யம்

ஸ்ரீ. உ. ப. வே. வேதாந்த வாவதூக ந்யாய வேதாந்த கேசரீ
வில்லிவலம் நாராயணாச்சாரியார் ஸ்வாமி எழுதிய உரையுடன்.

பதிப்பித்தவர்

ந. கண்ணன்

ந. ரங்கராஜன்

நெடுந்தெரு திருப்பதி அ. நரசிம்ம அய்யங்கார் அவர்களின்
60-வது வருஷ கல்யாண மஹோத்ஸவத்தில் வெளியிடப்பட்டது.

(29—2—1968)

Koviloor Digital Library



Koviloor Digital Library

kmm09927
D

3141 .

    

ஸ்ரீ:

श्रीमते श्रीलक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ।
श्रीमते निगमान्तमहादेशिकाय नमः
श्रीमते श्रीवण्शठकोप, श्रीवेदान्तदेशिकयतीन्द्र
महादेशिकाय नमः ॥

புள்ளம் பூதங்குடி வித்வான் ராஜகோபாலாச்சாரியர் ஸ்வாமியை அறியாதார் யாரும் இருக்கமாட்டார்கள் அந்த ஸ்வாமி ஞாநாநுஷ்டாந வைராக்ய நிதியாய், ஸ்ரீஸன்னிதியில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை பலவருஷங்கள் ஆராதித்து வந்தார். அவருக்கு மாப்பிள்ளையாயும், பிள்ளையாயும் இருக்கும் பாக்யம் பெற்றவர், நம் நெடுந்தெரு திருப்பதி ஸ்ரீநரஸிம்ஹ ஐயங்கார் ஸ்வாமி. இவர் பரம ஆஸ்திகர். பகவத்பாகவத ப்ரதிபத்தியே வடிவுபடைத்தவர். நமது ஸம்ப்ரதாயத்திற்காக ஸதா உழைப்பவர். இவரது முயற்சியால் ஸ்ரீரங்கத்தில் ஸ்தோத்ரபாட கோஷ்டி ஒன்று ஏற்பட்டு எல்லோரும் ஸ்ரீதேசிக ஸ்தோத்ரங்களை நன்கு அப்யஸித்து வருகிறார்கள் என்பது உலகறிந்த விஷயம். இவரது குமாரர்கள் விளக்கில் கொளுத்தின பந்தம்போல் எல்லா அம்சங்களிலும் தகப்பனாரையும் விஞ்சிவிட்டார்கள். பறப்பதின்குட்டி தவழுமா ? இவர்கள் தங்கள் தகப்பனாரின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவ நினைவு மலராக ஸ்ரீரகுவீர கத்யத்தை, வ்யாக்நானத்துடன் வெளியிடுகிறார்கள். ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த க்ரந்தங்கள் பலபல. அவைகளில் ஒரொன்றே நமது வாழ்விற்குப் போதுமானது. அதிலும், தேசிக சப்தம் ஈரரசுபடாதபடி பண்ணின மஹாதீரரான ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் ராம சப்தம் ஈரரசுபடாதபடி பண்ணின மஹாவீரரான சக்ரவர்த்தித்திருமகனைப்பற்றி அருளிய மஹாவீரவைபவம் என்கிற ரகுவீரகத்யத்திற்கு நிகர்தான் ஒன்றுண்டோ. இது பவபயபேஷஜமானது. இதற்கு நமது ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான், வேதாந்தவாவதூக. வித்வந்மணி ஸ்ரீவில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி எழுதியுள்ள வ்யாக்யானம் பண்டித பாமர ரஞ்சகமாய் உள்ளது. சி. கண்ணனும், சி. ரங்கராஜனும் தங்கள் தகப்பனாரின் சதா

Koviloor Digital Library

பிஷேகத்தையும் இவ்விதமே கொண்டாடி மேன்மேலும் எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்கவேண்டுமென்று ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ப்ரார்த்தித்து ஸ்ரீமதழகிய சிங்கர் அனுக்ரஹித்த ஸ்ரீமுகம்.

இந்தப்படி ஸ்ரீநியமநம்,
ஹோ. ரங்காச்சாரியார்
ஸ்ரீகார்யம். ஸ்ரீஅஹோபிலமடம்

Koviloor Digital Library

    

ஸ்ரீ:

ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீரகுநந்தன பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

முகவுரை

துப்புல் வருநிகமாந்தாசாரியன் பாதாரவிந்த மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தீக்ஷா நல்லோர் திரளில் சேர்ந்த நம் ஸ்ரீரங்கவாஸி நெடுந்தெரு திருப்பதி நரசிம்ம ஐயங்கார் ஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவத்தன்று வெளியாகும் இந்நூல் ஸ்ரீமத் வேதாந்த தேசிகனது ஏழாவது நூற்றாண்டு மலராக மலர்ந்து மணம் வீசுவது மிகவும் பாராட்டத்தக்கது. தேசிகதர்சனத்துக்குப் பல்விதங்களில் தொண்டாற்றிவரும் அந்த ஸ்வாமியும், அவர் திருக்குமாரர்களும், அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களும் நீடூழி நல்வாழ்வு வாழ பெரிய பெருமாளும், பெருமாளும் தேசிகர்பெருமானும் அருள்புரிவார்களாக.

இங்கே பிரசுரிக்கப்படும் ரகுவீரகத்யம் பத்யம்போல் இனிக்கும் ஒரு அழகியகத்யம். கவிஸார்வ பௌமனான வால்மீகிபகவான் அருளிய ஸ்ரீமத் ராமாயணத்துக்குக் கவிகேஸரி செய்தருளிய ஒரு ஸங்க்ஷேபம் (சுருக்கம்). பாலகாண்ட முதல் ஸர்க்கத்தோடு குலசேகராழ்வார் அருளிய ஆங்கணெடு மதில் திருமொழியோடு வாசியற இந்த ரகுவீரகத்யம் என வழங்கும் மஹாவீரவைபவமும் ஒரு ஸங்க்ஷேப ராமாயணமே. இதன் சொல் நயமும் பொருள்நயமும் பேரானந்தம் பயக்கவல்லவை. தேசிக ஸ்ரீஸூக்தியன்றோ இது! கடோரமாயும், ஸுகுமாரமாயும் விளங்கும் இந்த கத்யம் பிறவிக் கடலையும் வற்றச்செய்யவல்லது என்பதை பலசுருதி தெரிவிக்கிறது.

வடமொழியில் விளங்கும் இந்நூலுக்கு எளிய அழகிய ஒரு தமிழுரையை ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் வேதாந்தவாவதூக ந்யாய வேதாந்த கேஸரீ, வில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி அனுக்ரஹித்திருக்கிறார். முதல் நூலான கத்யமும், அதன் தமிழுரையும், பாலுடன் சர்க்கரை சேர்ந்தாப்போல் படிப்பவர் இன்பத்தை இரட்டிக்கச்செய்கின்றன. தற்போதைய தேசிகதர்சன மஹாவித்வான்களில் முன்னணி

Koviloor Digital Library

யில் நிற்கும் இந்த ஸ்வாமியின் வைதுஷ்யமும், ரஸிக்யமும் உலகம் நன்கறிந்து அனுபவித்து வருகிறது.

பொதுமக்கள் படித்து இன்புறும் முறையில் இம்மாதிரி தேசிக திவ்ய ஸூக்தி ஒவ்வொன்றையும் அழகிய தமிழுரையோடு அச்சிட்டு உதவுவதே ஸ்வாமி தேசிகன் ஏழாவது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் முறைகளுள் சிறந்தது.

இதே முகவுரை எழுதுவதின் மூலம் எனக்கு இப்பதிப்பில் பங்கு கொடுத்த ஸ்ரீநரசிம்ம ஐயங்கார் ஸ்வாமி குமாரர்களுக்கு அடியேனது அன்புகலந்த ஆசீர்வாதங்கள்!

சென்னை-7.
29-2-68

D. ராமஸ்வாமி,
Advocate.

Koviloor Digital Library

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ நரஸிம்ம பரப்ரம்மணே நம:

" ஓரிருவார்த்தைகள் "

" மஹாவீரவைபவம் " என்று ஸ்வாமிதாமே திருநாமமிட்டருளிய இந்த கத்யப்ரபந்தம் ஸ்ரீராமாயண ரஸிகனை ராமபத்ரனை அதனினும் விஞ்சிவசீகரிக்கவல்லது. அதுவெறும் கவிகோகிலத்தின் கூவுதலால்ஆனது இதுவோவெனில் கவிதார்க்கிக ஸிம்மத்தின் கர்ஜனை சேர்ந்தது.

கவிகதகஸிம்மகதிதம்: என்றார் கடைசியில் ஸ்வாமி. அதனால் தான் கடோர ஸுகுமாரகும்பகம்பீரமாயிற்று இத்துதி. கவியின் பேச்சென்ற முறையில் ஸுகுமாரமானது. தார்க்கிகனுடையது என்ற நோக்கில் கடினமானது. சக்ரவர்த்தித்திருமகனின் திருக்கைகள் போல் சிவதனுஸ்ஸை முறித்தபோது முரடானது (கண்ட பரசுகோதண்டப்ரகாண்டநசெளண்ட புஜதண்ட.) பிராட்டியின் திருமார்பில் தவழும் போது மிருதுவானது. (ஜநகதுஹித்ரு குசதடவிஹரண ஸமுசிதகரதல).

இவ்விதம் நரஸிம்மனுடைய திவ்யாகாரம்போல் சேவிதகுணச்சேர்த்தியுடைய இந்த ஸ்தோத்திரத்தை என்னைக் கொண்டு எழுதி விளக்கத்தை வெளிட்டருளினான் ஸர்வேச்வரன்.

ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியன்று இதை நாம் எழுதிப் பூரித்து பெருமகிழ்ச்சியால் உள்ளம் பூரித்து நிற்கிறோம். வடகோடியில் ஸ்ரீ காசியில் மிகப்ரகாசிக்கும் ஸ்ரீகங்கையின் மடியில் உட்கார்ந்து உள்ளத்தால் தென்னரங்கனைத்யானித்து அவனுடைய திருவடித்தாமரைக்கு இதைக் காணிக்கையிடுகிறோம். இன்று அவன் அங்கு திருமாமணிமண்டபத்தில் கண்டருளும் திருவாய் மொழித் திருநாள் தொடக்கமும் பரமபதவாசல் ப்ரவேசமும் நமக்கு முன்பே பலகால் அச்சுவை பெற்றிருக்கும் நமக்கு நினைவிற்குவந்து நலிகின்றன. என்று மீண்டும் காணப்பெறுவோம்? என்று ஏங்கச்செய்கின்றன.

Koviloor Digital Library

ஸ்ரீரங்கம் நமது மித்திரர் நெடுந்தெரு ஸ்ரீ எ. நரஸிம்மஐய்யங்கார் ஸ்வாமி எம்மை இக்காரியத்திற்காகத் தேர்ந்தெடுத்துக் கூவிக்கொண்டதை என்றும் மறவேன். இதனால் எவராயினும் சிறிதாயினும் ஸ்ரீராமகுணானுபவத்தின் எப்போதாகிலும் அவகாஹிக்கப் பெறுவரேல் அப்போது நாம் செய்தது ஸபலமாயிற்றென்று உகப்போம்.

ஸ்ரீ காசி கேதார்காட்.
"கூடாரை வெல்லும் சீர்.",
மார்கழி 27வ
11-1-68.

இப்படிக்கு
ப. நாராயண தாஸன்
(வாராண ஸேய ஸம்ஸ்க்ருதவிச்வ வித்யாலயம். ஸ்ரீராமானுஜ வேதாந்த வ்யாக்யாதா வேதாந்தவாவதூக: வித்வந்மணி: ந்யாயவேதாந்த கேஸரீ)

Koviloor Digital Library

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ।
श्रीमते वेदान्त गुरवे नमः ।
॥ रघुवीरगद्यम् ॥ (ரகுவீரகத்யம்.)

(வில்லிவலம் ஸ்ரீ நாராயணாச்சாரியார் ஸ்வாமி எழுதிய பொருள்—குறிப்பு—இவைகளுடன் கூடியது.)

श्रीमान्वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्योमे सन्निधत्तां सदा हृदि ॥

(ஸ்ரீமாந்வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோமே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ॥)

जयत्याश्रितसन्त्रासध्वान्तविध्वंसनोदयः ।
प्रभावान् सीतया देव्या परमव्योमभास्करः ॥

(ஜயத்யாச்ரிதஸந்த்ராஸத்வாந்தவித்வம்ஸநோதய: ।
ப்ரபாவாந்ஸீதயா தேவ்யாபரமவ்யோமபாஸ்கர: ॥)

சரணமடைந்தவர்களின் மனச்சஞ்சலமாம் மையிருளைப் போக்க பிராட்டியாம் பேரொளியுடன் பரமலோக ஆகாய வெளியில் உதிக்கும் சக்ரவர்த்தித் திருமகன் (ஸூரியன் போல்) விளங்குகிறான். ("அநந்யாராகவேணாஹம் பாஸ்கரேணப்ரபாயதா" என்ற ராமாயணச்லோகமிங்கே நினைக்கத்தக்கது. உலகில் வெளியிருளே ஸூரிய வெளிச்சத்தினால் விலகும். இங்கு ராம ஸூர்யனால் உள்ளத்தின் இருளும் விலகுகிறது. ஸூரியனின் காந்தி க்ரஹண நிகாலங்களில் குறைவுபடும். இங்கு பிரபையாகிய பிராட்டி இவனை விட்டு இறையுமகலகில்லாள் என்று வேறுபாடு உணர்த்தப் படுகிறது)

जय जय महावीर ! महा धीर धौरेय ! ॥ १ ॥

(ஜய ஜய மஹாவீர ! மஹா தீர தௌரேய !)

மஹாவீரனும் மஹாதீரர்களுள் முதன்மையானவனுமான நீ மேன்மையுற்று விளங்குவாயாக.

(இதை இரண்டு வாக்கியமாகவும் பிரித்து அனுஸந்திப்பர். உடலுறத்தை வீரமெனவும் மனவுறுதியை தீரமெனவும் பகுத்துக்கூறுவர்.)

Koviloor Digital Library

देवासुर समर समय समुदित निखिल निर्जर निर्धारित निरवधिक माहात्म्य ! ॥ २ ॥

(தேவாஸுரஸமர ஸமய ஸமுதிதநிகில நிர்ஜர நிர்தாரித நிரவதிக மாஹாத்ம்ய ! ॥)

தேவாஸுர யுத்தத்திற்காகக் கூடிய தேவர்கள் ஒரு ஸமயம் தீர்மானித்த படியில் எல்லையற்ற பெருமைபடைத்தவனே !

(ஓ மஹாவீரனே ! நீ மேன்மையுடன் விளங்குவாயாக—जय जय என்ற முன் வாக்கியத்தை இந்த இரண்டாம் வாக்கியம் முதல் மேல் எங்கும் சேர்த்துப் பொருள் கொள்ளவேணும். பல குருடர்கள் கூடி யானையை அறிய முயன்ற கதை போல் தேவர்கள் கூடி தீர்மானித்ததும் உன்பெருமையின் சில பகுதிகளே என்ற கருத்து தொனிக்கிறது இங்கே. சக்ரவர்த்தியின் புத்திர காமேஷ்டியாகத்திற்கு முன் நடந்த கதை பற்றியது இதுவும் மேல் வாக்கியமும்.)

दशवदनदमितदैवत परिषदभ्यर्थितदाशरथि भाव ! ॥ ३ ॥

(தசவதநதமிததைவதபரிஷதப்யர்த்தித தாசரதி பாவ ! ॥)

இராவணனால் மிதியுண்ட தேவர்கள் குழாம் வேண்டினபடியிலேயே சக்கிர வர்த்தியின் திருக்குமாரனாக அவதரித்தோனே ! ।

(இராவணன் - மனித இனத்தை மதியாமல் மற்றவரால் தனக்கு மரணம் கூடாதென்று வேண்டிக்கொண்டதை நன்கறிந்த தேவர்கள் பகவானை மனிதனாக அதிலும் சக்கிரவர்த்தியின் திருக்குமாரனாக அவதரிக்க வேண்டினர் என்றது இங்கநுஸ்ந்தேயம்.)

दिनकरकुलकमलदिवाकर ! ॥ ४ ॥

(தினகரகுலகமலதிவாகர !)

ஸூரியவம்சமாம் பெருந்தாமரைமலர அதிலுதித்த ஸூரியனே !

("ஸூர்யஸ்யாபிபவேத்ஸூர்ய:" என்றபடி ஸூரியனுக்கும் மேம்பட்ட ஸூர்யனாய் உலகித்திற்கு அவன் செய்யும் உதவியை அவன் ஸம்பந்தப்பட்டவம்சத்திற்கே இவன் செய்தான் என்ற ரஸமிங்கேயறியவும்.)

Koviloor Digital Library

दिविषदधिपति रण सहचरण चतुर दशरथ चरमऋण विमोचन ! ॥ ५ ॥

(திவிஷததிபதி ரண ஸஹசரணசதுரதசரதசரமருண விமோசன ! !

இந்திரனுக்கு யுத்தத்தில் உதவிய தசரத சக்கிரவர்த்தியின் பித்ருக்கடனை (பிள்ளை பிறவாமையை)த்தீர்த்த புண்ணியனே !

(ஒரு கல்லில் இரண்டு பழம் வீழ்த்து வாரைப்போல் பெருமாள் சக்கிர வர்த்தியின் வயிற்றில் பிறந்தது இவர் பித்ருக்களின் கடன் கழற்றவும் இந்திரன் தனது யுத்தகால நண்பனுகிய இவர் கடன் கழற்றவும் உதவிற் றென்றுகருத்து. " (ஒருவன் பிறந்த பிறகு வாங்கும் கடன் கிடக்கட்டும்) முன்பே மூன்றுகடன் கொண்டவனுகப் பிறக்கிறுன். அவையாவன :— யாகங்களாலாற்ற வேண்டிய தேவர்கள் கடன் - வேதாத்திய யனம் செய்து துடைக்க வேண்டிருஷிகளின் கடன் - புத்ராதிஸந்ததியை உண்டாக்கிக் கழற்ற வேண்டிய பித்ருக்கள் கடன் - என்ற வேதார்த்தமிங்கறிய வேண்டியது.)"

कोसल सुताकुमारभावकञ्चुकित कारणाकार ! ॥ ७ ॥

(கோஸலஸுதாகுமாரபாவகஞ்சுகிதகாரணுகார !)

கௌஸல்யாதேவியின் குமாரன் என்கிற வேஷத்தில் மறைந்து திரியும் மறையின் பொருளே ! காரணவஸ்துவே !

(சக்கிரவர்த்தி - கௌஸல்யாதேவி என்ற இருவரில் பெருமாளுக்கு "கௌஸல்யாஸுப்ரஜாராம !" என்ற விச்வாமித்ரர் வாக்கின்படி தேவியின் பிள்ளையானமையே பிடித்த விஷயம். சக்ரவர்த்தித்திருமகனுனமை - அவருக்கு பித்ருக்கள் கடன் தீர உதவினது மட்டுமே பெருமாளுக்குப் பிடித்த தல்ல. சக்கிரவர்த்தித்திருமகன் பரதனுமாகலாம். கௌஸல்யா ஸுப்ரஜை ராமன் தவிர வேறுயாருமல்லவே ?)

कौमारकेळि गोपायित कौशिकाध्वर ! ॥ ७ ॥

(கௌமாரகேளிகோபாயித கௌசிகாத்வர !)

தனது பாலியலீலைகளாலேயே விச்வாமித்ரயாகஸம்ரக்ஷணம் செய்தபரம !

(எங்கள் கண்ணனுக்கேயல்லது உங்கள் ராமனுக்கு பாலலீலா விநோதங்கள் இல்லையே என்றுக்ருஷ்ண பக்தர்கள் கேளாதபடிக்கு இவ

Koviloor Digital Library

னுக்கும் அது உண்டு என்கிறது இங்கே. தனது கோபத்தினால் முயன்று ருத்ரன் தக்ஷனது யஜ்ஞத்தைத்வம்ஸம் செய்தானங்கு. இங்கு எங்கள் ராமன் எவ்விதமுயற்சியுமின்றியே லீலையாகவே விச்வாமித்திரயாகத்தை ஸம்ரக்ஷணம் செய்தான் என்றும் தொனிக்கிறது.)

रणाध्वर धुर्यभव्य दिव्यास्त्र वृन्दवन्दित ! ॥ ८ ॥

(ரணாத்வரதுர்யபவ்ய திவ்யாஸ்த்ரப்ருந்த வந்தித !)

யுத்தமாகிற பாவநயஜ்ஞத்தில் மிகவும் உபயோகமுள்ள உயர்ந்த அஸ்த்ரங்கள் திரள்திரளாகத் தோன்றி மிக்க வணக்கத்துடன் என்னைக்கொள் என்னைக்கொள் என்று வேண்டி நிற்கும் படியான பெருமையோனே. !

(ஒரு யாகத்தில் யஜமானனை ஆதரிக்கவே - யுத்தமாகிற யாகத்தில் ருத்விக்களாகிற தங்களையுமிவன் ஆதரிப்பான் என்று அஸ்த்ரங்கள் இவன் முன்தோன்றி வேண்டிக் கொண்டன என்பது மூலத்தின் ஹ்ருதயம். யாகத்தில் உபயோகப்படும் ப்ராணிகளுக்கு மேல் உலகில் மிகுந்த நன்மை உண்டாவது போல - இங்கும் யுத்தகளத்தில் உயிர் நீத்துவிடும் மனிதர்களுக்கு வீரஸ்வர்க்கம் வந்து வாய்த்திடும் என்று உணர்த்துகிறது - ரணாத்வர என்னும் பதம்)

प्रणतजन विमत विमथन दुर्ललित दोर्ललित ! ॥ ९ ॥

(ப்ரணதஜந விமத விமதந துர்லலிததோர்லலித !)

சரணாகதர்களான ருஷிஜநங்களின் விரோதிவர்கத்தை வித்வம்ஸநம் செய்யும் வலிமை கொண்ட திருத்தோள் படைத்த பெரும !

(தனது புஜபலம் அஸ்த்ரபலம் முதலியவைகளை துஷ்டநிக்ரஹத்துக் காக்கிக் கொண்டானே யன்றி சிஷ்டர்களுக்கு எதிராகவன்று என்கிறது.)

तनु तर विशिख विताडन विघटित विशरारु शरारु ताटकाताटकेय ! ॥ १० ॥

(தநுதரவிசிகவிதாடநவிகடித விசராருசராரு தாடகாதாடகேய !)

சிறிய சில பாணங்களால் கொடியவர்களான தாடகையையும் அவள் புத்திரர்களையும் பரஸ்பரம் பிரித்து வைத்த வீரனே !

Koviloor Digital Library

(தாயை விட்டு மகனைப் பிரிப்பது பாவமென்பர். ஆனால் இந்த துஷ்டர்கள் விஷயத்தில் அதுவே தர்மமாகியது. வருங்காலத்தை மனதில் கொண்டு மாரீசனை மட்டும் பெருமாள் கொல்லாமல் விடுத்தது பற்றி-இங்கு பிரித்தமை எல்லோருக்கும் பொதுவாக பேசப்பட்டது)

जडकिरण शकलधरजटिल नटपति मकुटतटनटन पटुविबुधसरिदतिबहुल मधुगलन ललितपद नलिनरज उपमृदित निजवृजिन जहदुपल तनुरुचिर परममुनिवर युवतिनुत ! ॥ १२ ॥

(ஜடகிரணசகலதரஜடிலநடபதி மகுடதடநடனபடுவிபுதஸரிததிபஹுளமதுகளந லலிதபத நளினரஜஉபம்ருதித நிஜவ்ருஜினஜஹதுபல தநுருசிர பரமமுநிவரயுவதிநுத !)

பிறை சூடிய சிவனின் தலையில் புரண்டுவரும் கங்கை பெருமாள் திருவடித் தாமரையினின்று பெருகின மதுதாரையாகும். அத்தகைய பெருமை வாய்ந்த திருவடியின் ஒருதுகள் தன்மேற்படவே அகல்யையின் சாபங்கள் அனைத்தும் சரிந்தன. கல்லுருவம் கழன்று நல்ல பெண் உருவம் பெற்றாள். அவளால் அந்நிலையில் பலவாறு ஏத்தப்பட்ட ஓ பரம புருஷ !

(இந்த சூர்ணையில் பலபல பதங்கள் காதுகளுக்கு இன்பம் தரும் ஓசை பெற்றிருப்பதுடன் அர்த்த புஷ்டியும் உடையனவாகும். இங்கு சிவன் ஜடகிரணனை தலையில் தரித்திருப்பதாக கூறப்படுகிறது. ஜடகிரணன் - குளிர் மதியான சந்திரன். அசடன் என்றும் தொனிக்கிறது அதனால் தான் அசடனோடு சேர்ந்து தானும் அசடனாகிய சிவன் தலையில் ஒரு பெண் (கங்கை) ஏறி கூத்தாடுகிறாள் என்று மேலே கூறினதோடு இசைந்துள்ளது. இவ்வளவிலும் சிவனே ஒரு பெரிய கூத்தன். நடபதி. கங்கை - விபுதஸரித், தேவலோகத்து நதி. முன்பு சொன்னபடி ஜடமல்ல. விபுதை - புண்டிதை என்றும் தொனி. இங்கு ராமபாதத்திற்கு இத்தகைய பெருமையில்லாவிடில் - அதாவது - அதில் மதுரமான அம்சம் இல்லாவிடில்—அதனால் மதுரதியான முநிபத்நி தோன்றியிராள் எனக்காட்டுவதே இந்த வர்ணனையின் கருத்து. திருவடித்தாமரையின் ரஜஸ்ஸால் — துகளால் தனது பாவம் தொலையப்பெற்றாள். இங்கு ரஜஸ் - ரஜோகுணம் என்றும் தொனிக்கிறது. ரஜோகுணம் பாவத்தைப் பெருக்குமேயல்லாது பாவத்தைப் போக்காது. ஆனால் அந்த விசித்ரமிங்கே நிகழ்துள்ளது. பெருமாள் திருவடியின் ப்ரபாவமேயிது என்று காட்டப்படுகிறது. பரம முநியின் வரயுவதி - அத்தகைய உயர்ந்த தபஸ்விக்கு இத்தகைய அழ

Koviloor Digital Library

குள்ள மனைவியாய்த்தது ஆபத்தே. "பார்யாரூபவதீ சத்ரு:" என்றது நீதி நூல். அழகுக்கு ஆசைப்பட்டு பரபுருஷர்கள் வர - இவள் அதனுல் கெட - அவரும் கோபவசப்பட்டு சாபமிட்டு தபோபலமிழக்கலானுர். பரம முநியின் வரயுவதி - இப்போது இவளோடு எங்கிருந்தோவந்த கௌதமரிஷியும் சேர்ந்துகொண்டார். இருவருமாக ராமனை வணங்கினுர்கள் என்றும் கருத்து)

कुशिकसुतकथित विदित नवविविध कथ ! ॥ १२ ॥

(குசிகஸுதகதித விதித நவவிவித கத !)

விச்வாமித்ரர் விதம் விதமாக புதுக்கதைகள் சொல்லக்கேட்டு மகிழ்ந்தவனே ! .

(அடுத்த வாக்யத்தில் இவர்கள் மிதிலா நகருக்குச் செல்லுகிறுர்கள். சின்னச்சிறுக் குழந்தை இராமன் எவ்விதம் இவ்வளவு தூரம் காலால் நடந்து வந்தான் என்ற கேள்வி எழுகிறது இங்கே அதற்குவிடையே இந்த வாக்யம் விச்வாமித்ரரின் கதைகளைக் கேட்குமின்பத்தில் வழி கடந்ததே தெரியாமல் இவ்வளவு தூரம் நடந்து வந்து விட்டான் ராமன் என்பது கருத்து உலகிலும் பிள்ளைப்பிராயத்தில் கதை கேட்கும் ஆர்வம் அதிகம் என்பது கண்கூடு.)

நவ - புதிய - ஒன்பது என்றும் கூறுவர்

मैथिलनगर सुलोचनालोचन चकोर चन्द्र ! ॥ १३ ॥

(மைதில நகர ஸுலோசனுலோசன சகோர சந்திர !)

மிதிலைவாழ் பெண்கள் கண்களுக்கு – சகோரத்திற்கு சந்திரன் போல ஆனந்தகரமானவனே ! அற்புத ராம !

(இது - கம்பனுடைய ஓர்ப்ரஸித்தமான பாட்டைத்தழுவினதாகும்)

खण्डपरशुकोदण्ड प्रकाण्ड खण्डन शौण्ड भुज दण्ड ! ॥ १४ ॥

(கண்டபரசுகோதண்ட ப்ரகாண்டந சௌண்டபுஜதண்ட ! .

சிறந்த சிவதநுஸ்ஸை ஒடித்த ஒப்பற்ற புஜபலத்தையுடையவனே !

(இந்த தநுஸ்ஸை முறிந்தவர்க்குத்தான் என் ஸீதை உரியவள் என்று ஜநகரின் ப்ரதிஜ்ஞையாகையால் அவள் விவாகத்திற்கு விக்நமாகன இந்த வில்லின் மேல் பெருமாளுக்கு அவ்வளவு கோபம் போலும்.)

Koviloor Digital Library

चण्डकरकिरण मण्डलबोधितपुण्डरीकवनरुचिलुण्टाक लोचन ! ॥ १५ ॥

(சண்டகரகிரண மண்டலபோதித புண்டரீகவநருசிலுண்டாகலோசந !) அப்போதே சூரியகிரணங்களால் அலர்த்தப்பட்ட தாமரைக் காடு போல் விரிந்து குளிர்ந்த திருக்கண்களையுடையோனே !

(ஸ்ரீ ஸீதா விவாஹத்துக்கு இடைச்சுவராக இருந்த வில்லு இற்று விழவே உள்ளம் மகிழ்ந்தது பெருமாளுக்கு. அம்மகிழ்ச்சி கண்களில் ஓர் புதுக்களிப்பை உண்டாக்கியது. ஆகவே அப்போதிருந்த இந்த நிலை இங்கு இவ்விதம் வர்ணிக்கப்பட்டது).

मोचितजनक हृदयशङ्कातङ्क ! ॥ १६ ॥

(மோசிதஜநக ஹ்ருதயசங்காதங்க !)

ஜநகமஹாராஜருடைய மனக்கலக்கத்தை இவ்விதமாகப் போக்கியருளினவனே !)

(கொள் கொம்பில் படரவிடவேண்டிய கொடிபோல் கொழுகொழுவென வளர்ந்த தம் மகளைப் பார்த்து-கடலில் சரக்கை முழுகக்கொடுத்துக் கரைகாணாது தவிக்கும் வியாபாரிபோல கலங்கிய ஜநகரின் மனதைத் தெளிவித்தமை இங்கே நோக்கத்தக்கது. இங்கே - முன் சூர்ணையுடன் இதை இணைத்து - "...லோசநமோசித..." என்றவாறு ஒரு வாக்கியமாகப் படித்தால் சொற்பொளின்பம் சிறந்து விளங்கும் என்று தோன்றுகிறது) அப்போது தாமரைக் கண்ணினன் என்ற தன்மையைக்கண்டு ஸீதை மனந்தெளிந்தாள் என்று வரும் கம்பனின் செய்யுளுக்கும் நெருக்கமாக இருக்கும். அவன் - சீதை - என்றதை - ஸ்வாமிப்ராசீனுசாரத்தை யொட்டி – ஜநகன் - (தகப்பன்) என்றுர் எனவும் கொள்ளலாம் அப்போது.

परिहृतनिखिल नरपतिवरण जनकदुहितृ कुचतट विहरण समुचित-करतल ! ॥ १७ ॥

(பரிஹ்ருதநிகில நரபதிவரணஜநகதுஹித்ரு குசதடவிஹரண ஸமுசிதகரதல ! .)

மற்ற அரசர்களின் ப்ரார்த்தனைகளை நிராகரித்த ஜநகநந்தினியான பிராட்டியின் திருமார்பகத்தில் விளையாடக் கொடுத்துவைத் தகைகளையுடயவனே !

Koviloor Digital Library

(பிராட்டியின் புற அழகைவிட பாதிவ்ரத்யத்தாலுண்டான அகத்தழகே பெருமானை மிக வசீகரித்ததாம். முன் அதிகடினமான சிவதநுஸ்ஸின் மேலும் விளையாடின திருக்கைகள். ஆயினும் இப்போது அதைவிட கடினமான இவள் மார்புகளில் விளையாடினமைதான் விசேஷம் என்று பொருள் தொனிக்கும்.)

शतकोटिशतगुण कठिनपरशुधर मुनिवरकरधृत दुरवनमतम निजधनुराकर्षण प्रकाशित पारमेष्ठ्य ! ॥ १८ ॥

(சதகோடிசதகுண கடினபரசுதர முநிவரகரத்ருத துரவநமதம நிஜதநுராகர்ஷணப்ரகாசிதபாரமேஷ்ட்ய!)

வஜ்ராயுதத்தை விட மிகக்கடினமான பரசுராமனுடைய வளைக்கவொண்ணாதவிஷ்ணுதநுஸ்ஸை வாங்கி வளைத்தமையால் தனது மேன்மையை உலகுக்கு வெளியிட்டவனே!.

(முன் ஒரு தநுஸ்ஸை முறித்துப் பெண்ணை மணந்தான். இப்பொழுது வேறொன்றை வளைத்துப் புகழை அணைந்தான் என்று கருத்து.)

क्रतुहरशिखरि कन्दुक विहृत्युन्मुख जगदरुन्तुद जितहरिदन्त दन्तिदन्त दन्तुरोदन्त, दशवदनदमन कुशल दशशत भुजमुखनृपति कुलरुधिरझर भरितपृथुतर तटाक तर्पितपितृक भृगुपति सुगति विहति करनतपरुडिपु परिघ ! ॥ १९ ॥

(க்ரதுஹரசிகரி கந்துக விஹ்ருத்யுன்முக ஜகதருந்துத ஜிதஹரிதந்ததந்தி தந்ததந்துரோ தந்த தசவதநதமனகுசல தசசதபுஜமுகந்ருபதி குலருதிரஜரபரித ப்ருதுதர தடாகதர்பித பித்ருக ப்ருகுபதி ஸுகதிவிஹதி கரநதபருடிஷுபரிக!.)

கைலாஸ மலையைப்பந்தாடினவனும் உலகுக்கு உபத்ரவம் தருபவனும் திக்கஜங்களைப்பொருதபோது அவற்றின் தந்தங்கள் மார்பில் பாய அதனால் ஏற்பட்ட வடுக்களையுடையவனுமான ராவணனையும் கட்டிப்போட்ட கார்த்தவீர்யனுடைய வம்சத்தில் வந்த துஷ்டக்ஷத்திரியர்களைக் கொன்று குவித்து ரத்தத்தைக் குளமாகத் தேக்கிதனது பித்ருக்களுக்கு பரசுராமன் தர்ப்பணம் செய்தார். அவருடைய கைவில்லை வாங்கி அவருடை தபஸ்ஸின் பலமான நல்லுலகங்களை எல்லாம் இல்லையாக்கினாய் நீ. அப்படிப்பட்ட வில்லாளனே!.

Koviloor Digital Library

(இங்கு இந்த விருத்தாந்தத்தால் ராமனுக்கு ராவணஸம்ஹாரத்தில் துளியும் ச்ரமமிருக்காது என்று ஸூசிதமாகியது. ராவணனைக் கட்டிய கார்த்தவீர்யனையும் கொன்ற பரசுமுநிவரையே ராமன் வென்றனுகில் ராவணனைவெல்லுவானெனச் சொல்லவும் வேணுமோ ? என்ற கைமுதிக நீதியை நோக்கவேணும்)

अनृत भय मुषित हृदयपितृवचनपालन प्रतिज्ञावज्ञात यौवराज्य ! ॥ २० ॥

(அந்ருதபயமுஷித ஹ்ருதயபித்ருவசநபாலநப்ரதிஜ்ஞாவஜ்ஞாத யௌவராஜ்ய ! .)

பொய் சொல்ல நேருமோ என்று மனம் நொந்த சக்ரவர்த்தியின் சொல்லைக் காத்து அரசு துறந்தவனே ! .

(மக்களின் முதற்கடன் தந்தை சொல்காப்பது. ஆதலால் அதை முன்னிட்டு ராஜ்யத்தை த்ருணமாக மதித்து ஒதுக்கினன் ராமன்.)

निषादराजसौहृद सूचित सौशील्यसागर ! ॥ २१ ॥

(நிஷாதராஜ ஸௌஹ்ருதஸூசிதஸௌசீல்யஸாகர !)

குஹனோடு தோழமை கொண்டு தனது கடலென்ன நீர்மையை நாடெல்லாமறியச் செய்தவனே ! .)

(கண்ணனுக்கு குசேலர் போல ராமனுக்கு வேடன் என்பர். உயர்ந்தோர் தாழ்ந்தவரோடு புரையறப்பறிமாறுவது நீர்மை குணம்.)

भरद्वाजशासन परिगृहीत विचित्रचित्रकूटगिरिकटक तटरम्याव-सथ ! ॥ २२ ॥

(பரத்வாஜசாஸநபரிக்ருஹீதவிசித்ரசித்ரகூடகிரிகடகதடரம்யாவஸத !)

பரத்வாஜரின் கட்டளைப்படி சித்ரகூட மலைச்சாரலில் குடியமர்ந்து மனம் மகிழ்ந்தவனே ! .

(புண்ணியதேசமேயாயினும் பெரியோர்கள் இசையாவிடில் அங்கு வாஸம் செய்வதால். ப்ரயோஜநம் ஏதும் இல்லை என்ற தர்மஸூக்ஷ்மத்தை இங்கு ராமன் வெளியிட்டான் என்கிறது இது.

Koviloor Digital Library

अनन्यशासनीय ! ॥ २३ ॥

(அநந்யசாஸநீய ! .)

(எல்லோருக்கும் மேம்பட்டவனாதலில்) மற்றோரால் கட்டளை இட முடியாதவனே ! .

(இப்படியிருந்தும் முன் சென்னபடி பரத்வாஜரின் ஆஜ்ஞையை இவன் ஏற்றது ஆச்சரியம் என்பது இங்கு குறிப்பு.)

प्रणतभरतमकुट तटसुघटित पादुकाग्र्याभिषेकनिर्वर्तितसर्वलोक योगक्षेम ! ॥ २४ ॥

(ப்ரணதபரதமகுடதடஸுகடித பாதுகாக்ர்யாபிஷேகநிர்வர்த்திதஸர்வ-லோகயோகக்ஷேம ! .)

தன்னைவந்து வணங்கிய பரதனின் சிரஸ்ஸில் தனது சிறந்த பாதுகைகளினால் அபிஷேகம் செய்து அதன் மூலமாக மூவுலகுமாண்ட பெருமனே ! .

(தன்னொருவனுடைய அபிஷேகத்தை இவன் தவிர்த்தானே யொழிய தனக்கு சேஷபூதர்களான பரதனுக்கும் பாதுகைகளுக்கும் முறையே பாதுகைகளினாலும் புண்ணியதீர்த்தங்களினாலும் அபிஷேகம் செய்து வைத்தான் எனக்கருத்து.

पिशितरुचिविहितदुरित वलमथनतनय बलिभुगनुगति सरभसशयनतृण शकलपरिपतनभयचकित सकल सुरमुनिवरबहुमत महास्त्रसामर्थ्य ! ॥ २५ ॥

(பிசிதருசிவிஹிததுரிதவலமதநதநயபலிபுகநுகதிஸரபஸசயநத்ருண சகல பரிபதநபயசகித ஸகலஸுரமுநிவரபஹுமத மஹாஸ்த்ரஸாமர்த்ய ! .)

மாம்ஸத்திலுள்ள வேட்கையாலே பிராட்டியின் மார்பில் பாய்ந்த இந்திரன் பிள்ளையான காகாஸுரனைப்பின் தொடர்ந்த தன்னுடைய சயனத்தின் ஒரு புல்லுக்கு பயந்து ஒளிந்து கொண்ட ஸகலதேவர்கள் ரிஷிகள் முதலியோராலே பாராட்டப்பட்ட அஸ்த்ரஸாமர்த்தியங் கொண்டவனே ! ,

Koviloor Digital Library

(ராமாயணத்தில் இங்கு கூறப்படாது மேலே ஓர் இடத்தில் கூறப் பட்ட இந்தஸம்பவம் இந்த ஸ்தோத்திரத்தில் இங்கேயே கூறி சரிக்கட்டப் பட்டது. பெயரைக்கெடுக்க இப்படியோர் பிள்ளை இந்திரனுக்குப் பிறந்தது. இவனை வியாஜமாக்கி பெருமாள் எல்லோருடைய பலாபல நிலைகளையும் சோதித்தறிந்து விட்டார். இதனுடைய விவரணமே மேல் சூர்ணையாகும்.)

द्रुहिणहर वलमथन दुरालक्ष्यशरलक्ष्य ! ॥ २६ ॥

(த்ருஹிணஹர வலமதநதுராலக்ஷ்யசரலக்ஷ்ய ! .)

ப்ரம்மா சிவன் இந்திரன் முதலியவர் கூட காக்க முடியாதபடி தனது பாணத்தை இலக்கை நோக்கி ப்ரயோகிக்ககூடியவனே !

(இந்த சூர்ணை - ''ப்ரம்மாஸ்வயம்பூ: ...'' என்று மேல் காண்டத்தில் வரப்போகும் ச்லோகத்தின் ஸாரம் ஆகும். அங்கு இதைச் சொல்வதை விட இங்கு சொல்வது பொருந்தும் என்று கருத்து.)

दण्डकातपोवन जङ्गमपारिजात ! ॥ २७ ॥

(தண்டகாதபோவநஜங்கமபாரிஜாதா ! .)

தண்டகாரண்யத்தில் ரிஷிகளின் தபோவனங்களிடையே நடமாடும் கற் பகத்தருவே ! .

(தண்டகாரண்யத்திற்கு சோபையூட்டுவதாலும் – ரிஷிகளுக்கு வேண் டியவற்றை வழங்கியதாலும் இவன் கற்பகத்தருவானுன். தேவலோத்திய அத்தருதாவர இனத்தைச் சேர்ந்தது. இந்த பூலோகபாரிஜாதம் ஜங்கம மாகும்.)

विराधहरिणशार्दूल ! ॥ २८ ॥

(விராதஹரிணசார்த்தூல ! .)

மானைப் புலி போல விராதனை நிரஸித்தவனே !

विलुलितबहुफलमखकलमरजनिचर मृगमृगयारम्भसंभृतचीरभृदनुरोध ! ॥ २९ ॥

(விலுளிதபஹுபலமககலமரஜநிசரம்ருகம்ருகயாரம்பஸம்ப்ருதசீரப் ருதநுரோத ! .)

பலவிதமாக பயன்தரும் யாகமாகிற பயிரை மஹர்ஷிகள் முயன்று விளைவிக்க - அவற்றில் ராக்ஷஸர்கள் பயிரில் ம்ருகங்கள் போல் ப்ரவேசித்து நாசம் உண்டாக, அப்பொது ரிஷிகளின் வேண்டுகோளின் மேல் ராக்ஷஸர்களை வேட்டையாடப் புகுந்தவனே ! ராம ! .

त्रिशिरश्शिरस्त्रितय तिमिरनिरासवासरकर ! ॥ ३० ॥

(த்ரிசிரஸ்த்ரிதய திமிர நிராஸவாஸரகர ! .)

த்ரிசிரஸ்ஸினுடைய மூன்று தலைகளையும் - ஸூர்யன் இருளைப்போக்குவது போல் அநாயாஸமாக துண்டித்தவனே ! .

दूषणजलनिधिशोषणतोषितऋषिगणघोषित विजयघोषण ! ॥ ३१ ॥

(தூஷணஜலநிதிசோஷணதோஷிதருஷிகண கோஷிதவிஜய கோஷண ! .)

தூஷணன் என்னும் ஓர் கடலை மணலேமிச்சமாம்படி வற்றச் செய்ததாலே மனமகிழ்ந்த மஹர்ஷிகள் கூடி விஜயகோஷம் செய்யும்படி நின்றவனே ! .

खरतरखरतरुखण्डन चण्डपवन ! ॥ ३२ ॥

(கரதரகரதருகண்டனசண்டபவந ! .)

கரன் என்னும் மிக முரட்டு மரத்தை முறித்துப்போட்ட புயல் காற்றே ! .

द्विसप्तरक्षस्सहस्र नळवन विलोळन महाकळभ ! ॥ ३३ ॥

(த்விஸப்தரக்ஷஸ்ஸஹஸ்ர நளவநவிலோலநமஹாகலப ! .)

ஈரேழு - பதினான்கு ஆயிரம் எண்ணிக்கையுடைய ராக்ஷஸ பரிவாரமெனும் காட்டுக் கோரைகளினிடையே புகுந்த மத்தகஜம் போல் நினைத்தபடி திரிந்து துகைத்தவனே !

असहायशूर ! ॥ ३४ ॥

(அஸஹாயசூர ! .)

துணை ஒருவரும் வேண்டாத சுத்த சூரனே ! .

(இந்த ஜநஸ்தாநவதத்திற்குத் துணையாக இளையபெருமாளும் கூட வரப்புக தன் திருவடியின் மேல் ஆணையிட்டு அவரை விலக்கி பிராட்டிக்குக்

Koviloor Digital Library

காவல் வைத்துப் பெருமாள் ஏகாகியாய் எழுந்தருளினது ப்ரஸித்தமிறே. பின்பு ஸ்ரீ குலசேகரப்பெருமாள் போன்ற ரஸிகர்கள் "ஏகச்சராமோ தர் மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி என்ற பாசுரம் கேட்டவளவிலே வயிற்றைப் பிடித்ததும் இந்தப்ரகரணத்திலேயன்றோ ? யுத்தகாலநெருக்கடி தீர்த்த தற்கு அடையாளமாக அதன் பிறகு இங்கு சுருக்கமான எளிய சூர்ணை படிப்பவருக்கும் சொல்பவருக்கும் இப்படி நடுவே ஒரு ஓய்வு தரல் வேண்டுமல்லமா ?)

अनपायसाहस ! ॥ ३५ ॥

(அநபாயஸாஹஸ ! .)

இப்படியொருஸாஹஸச் செயலிலிறங்கியும் தனக்கொரு அபாயம் வரப்ரஸக்தியற்றவனே ! .

(அன்றும் இம்மாதிரி ஒரு பாசுரத்தைச் சொல்வித்தான் ஸ்ரீகுலசேகரப் பெருமாளை ஸ்ரீ ராமாயண்பண்டிதரும் திரும்பவரவழைத்தது,)

महित महाम्रृधदर्शन मुदितमैथिलीदृढतरपरिरम्भणविभवविरोपित विकट वीरव्रण ! ॥ ३६ ॥

(மஹிதமஹாம்ருததர்சனமுதிதமைதிலீத்ருடதரபரிரம்பணவிபவவிரோபித விகடவீரவ்ரண ! .)

கிடைத்தற்கரியயுத்தத்தைக் கண்டு மனமகிழ்ந்த மைதிலியிறுகத்தழுவினதால் முழுதும் ஆறித்தணிந்த யுத்தகால பாணவ்ரணங்களை யுடையோனே ! .

(உலகில் பெண்கள் பெரும்பாலும் சண்டையைக் கண்டால் ஒடியொளிவர். ஆனால் இங்கு பிராட்டி சுத்த க்ஷத்திரிய புத்திரியாகையால் யுத்தத்தைக கண்டு களித்தாள் என்னப்பட்டது பிராட்டி முன்பு ஒருக்கால் பெருமாளை ஆணுடையுடுத்த ஒரு பெண் பிள்ளை என்றாள். அச்சொல் பெருமாள் திருவுள்ளத்தில் பட்டு உறுத்திக்கொண்டிருந்தது இப்போது ஸமயம் வாய்த்தவாறே - தாம் ஒரு ஆண் பிள்ளையே எனக்காட்டினாராயிற்று பிராட்டியும் தாம் முன்பு சொன்னமைக்கு அபசாரக்ஷாமணம் செய்கிறவள் போல இவரை இறுகத்தழுவினாள் அந்த ஆலிங்கனத்தின் வெம்மை புண்களுக்கு வேது கொடுப்பது போல் ஹிதமாக பரிணமித்தது என்பர்.)

Koviloor Digital Library

मारीच मायामृगचर्मपरिकर्मित निर्भरदर्भास्तरण ! ॥ ३७ ॥

(மாரீச மயாம்ருகசர்மபரிகர்மிதநிர்பரதர்பாஸ்தரண ! .)

மாயமான் மாரீசனுடைய அழகிய மேல் தோலால் அலங்கரித்த ஆஸநத்தில் வீற்றிருப்பவனே ! .

(ராமாயணத்தில் இவ்விதம் சொல்லப்படவில்லை. ஆயினும் பிராட்டி முதலில் இந்தமான் தோலில் மயங்கி - நாமிருவரும் இதில் உட்கார்ந்து மகிழவேணும்" என்று பெருமானை வேண்டிக் கொண்டதாக மூலத்தில் காண்கிறது அந்த ஆசையும் நிறைவேறினதாகக் காட்டுமிச்சூர்ணை.)

विक्रमयशोलाभविक्रीतजीवित गृध्रराजदेहदिधक्षालक्षितभक्तजन दाक्षिण्य ! ॥ ३८ ॥

(விக்ரமயசோலாபவிக்ரீதஜீவிதக்ருத்ரராஜதேஹதிதக்ஷாலக்ஷிதபக்த ஜனதாக்ஷிண்ய ! .)

வீரப்புகழ் எய்த விரும்பி உயிரைவிற்ற ஜடாயுவை எடுத்து அக்னிஸம்ஸ்காரம் செய்தருளிட தனது பக்தப்ரியத்வத்தை வெளியிட்டவனே ! வருக !

(தனது தகப்பனாரை ஸம்ஸ்கரிக்காத குறை இதனால் பெருமானுக்கு நீங்கிற்று. ஆனால் காட்டிலே கழுகுக்கரசன் பெற்ற நன்மையும் நாட்டியே தசரதன் பெற வில்லை என்பது அவனுக்குக்குறையே.)

कल्पित विबुधभाव कबन्धाभिनन्दित ! ॥ ३९ ॥

(கல்பிதவிபுதபாவகபந்தாபி நந்தித ! .)

கபந்தனுக்கு தைவத்தமைவழங்கி அவனால் தோத்தரிக்கப்பட்டவனே !

अवन्ध्यमहिममुनिजनभजनमुषितहृदयकलुषशबरीमोक्षसाक्षिभूत ! ॥ ४० ॥

(அவந்த்யமஹிமமுநிஜநபஜநமுஷிதஹ்ருதயகலுஷசபரீமோக்ஷஸாக்ஷிபூத ! .)

பொய்யாத பெருமையுடைய மஹர்ஷிகளை ஆச்ரயித்து அவிவேகம் நீங்கிய சபரி அந்த மஹிமையால் மோக்ஷம் செல்ல அவளை அனுமதித்துப் பார்த்திருந்தவனே !

Koviloor Digital Library

(ஆசார்யர்களையே தஞ்சமாகப் பற்றிய சபரி அவர்களுடன் மோக்ஷம் செல்லாது அவர்கள் கட்டளையின் மேல் ராமனுடைய வரவுக்காகக் காத்திருந்தாள். பிறகு இவன் வந்த உடன் உபசரித்து அநுமதிபெற்று மோக்ஷம் செல்லுகிருள். இதனால் ஆசாரியர்கள் தமது சிஷ்யர்களுக்கு மோக்ஷமும் தாவல்லர். எம்பெருமானும் இதை அநுமதிக்கக்கடவனே யல்லது மறுக்க மாட்டான் என்று தேறுகிறது. இங்கு உள்ள "ஸாக்ஷி பூத" என்னும் பதம் இக் கருத்துடையதே.)

प्रभञ्जनतनयभावुकभाषितरञ्जितहृदय ! ॥ ४१ ॥

(ப்ரபஞ்சனதநயபாவுகபாஷிதரஞ்சிதஹ்ருதய !)

திருவடியின் அழகிய பேச்சில் மனம் மயங்கியவனே !

(மேலே தனது தூதனைப் போகிறவனுடைய வாக்குவன்மையை முதலிலே யேபெருமாள் உணர்ந்தார். அதனால் பெருமாள் திருவடியை - சொல்லின் செல்வன் - என்றழைத்ததாக கம்பன் கூறுகிருன்.)

तरणिसुतशरणागतिपरतन्त्रीकृतस्वातन्त्र्य ! ॥ ४२ ॥

(தரணிஸுதசரணுகதிபரதந்த்ரீக்ருதஸ்வாதந்த்ரிய !)

ஸுக்ரீவமஹாராஜன் வந்து சரணடைந்த உடன் தனது ஸ்வாதந்த்ரியத்தை யெல்லாம் அவனிட்டவழக்காக்கியவனே !

दृढघटितकैलासकोटिविकटदुन्दुभिकङ्कालकूटदूरविक्षेपदक्षदक्षिणेतरपादाङ्गुष्ठदरचलनविश्वस्तसुहृदाशय ! ॥ ४३ ॥

(த்ருடகடிதகைலாஸகோடிவிகடதுந்துபிகங்காளகூடதூரவிக்ஷேப தக்ஷதக்ஷிணேதரபாதாங்குஷ்டதரசலனவிச்வஸ்தஸுஹ்ருதாசய !)

கைலாஸமலைபோல் குவிந்திருந்த துந்துபியின் எலும்புக் கூட்டை தனது காலின் கட்டை விரலின் சிறிய அசைவினுல் தூக்கி எறிந்து தோழனுக்குத் தன்னிடம் நம்பிக்கை பிறக்கும்படி செய்தவனே !

(முன் சூர்ணையில் பெருமாள் தனது ஸ்வாதந்த்ரியத்தை சரணுகதனிட்டவழக்காக்கினுர் என்றதின் விரிவு இது ஸுக்ரீவன் பெருமாளை பலவான் என நம்பமறுத்து பலத்திற்கு அறிகுறியாக துந்துபியின் எலும்புக் கூட்டை தூக்கி எறியச் சொன்னுன் என்று மூலத்தின் கதை.)

Koviloor Digital Library

अतिपृथुलबहुविटपिगिरिधरणि विवरयुगपदुदय विवृत चित्र पुङ्ख-वैचित्र्य ! ॥ ४४ ॥

(அதிப்ருதுலபஹுவிடபிகிரிதரணிவிவரயுகபதுதயவிவ்ருதசித்ர புங்கவைசித்ர்ய ! .)

மிகப் பெரிய ஸாலவ்ருக்ஷங்கள் மலைகள் பூமி இவைகளை ஒரே ஸமயத்தில் பிளந்து வெளிவந்த தனது பாணப்ரயோகஸாமர்த்தியத்தை வெளியிட்டவனே !

विपुलभुजशैलमूलनिबिडनिपीडितरावणरणरणकजनक चतुरुदधिविहरण चतुर कपिकुलपतिहृदयविशालशिलातलदारणदारुण शिलीमुख ! ॥ ४५ ॥

(விபுலபுஜசைலமூலநிபிடநிபீடிதராவணரணரணகஜநகசதுருததிவிஹரணசதுர கபிகுலபதிஹ்ருதய விசாலசிலாதலதாரணதாருணசிலீமுக !)

பெரிய பர்வதங்கள் போன்ற தனது கைகளின் கீழ் ராவணனை நன்கு இடுக்கிப் பிழிந்த - நான்கு ஸமுத்ரங்களையும் ஒரேயடியாகத் தாண்டவல்ல வாலியின் பெரிய பாறை போன்ற மார்பு பிளக்கும்படி சரம் துறந்தவனே !

இதனால் பெருமாள் வாலிக்குப் போதுமானவர் என்று சுக்ரீவன் அறிந்து கொண்டான். ஏனெனில் வாலியின் கைகளில் கீழே ராவணன் ஒரு ஸமயம் சிக்கித்தவித்தான்.)

अपारपारावारपरिखापरिवृतपरपुरपरिसृतदवदहनजवन पवनभवकपिवर परिष्वङ्गभावित सर्वस्वदान ! ॥ ४६ ॥

(அபாரபாராவாரபரிகாபரிவ்ருதபரபுரபரிஸ்ருததவதஹநஜவநபவநப கபிவரபரிஷ்வங்கபாவிதஸர்வஸ்வதாந !)

எல்லையற்ற கருங்கடல் சூழ்ந்த லங்காபுரியில் தீயிட்ட திருவடி திரும்பி வந்தபோது தனது ஸர்வதநமான ஆலிங்கநத்தை வழங்கி கௌரவித்தவனே ! .

(இந்த ஒரு சூர்ணையே ஸுந்தரகாண்டம் முழுவதற்கும் சுருக்கமாக இருக்கும் பிராட்டிக்கே உரிய தனது ஆலிங்கனஸுகத்தை பிராட்டியைக் கண்டு வந்தவனுக்கும் பெருமாள் அளித்தார்.)

आहूतसहोदररक्षः परिग्रहविसंवादिविविधसचिव विप्रलम्भसमयसंरम्भसमुज्जृम्भित सर्वेश्वरभाव ! ॥ ४७ ॥

Koviloor Digital Library

(அஹிதஸஹோதர ரக்ஷ: பரிக்ரஹவிஸம்வாதிவிவிதஸசிவவிப்ரலம்ப ஸமயஸம்ரம்பஸமுஜ்ஜ்ரும்பிதஸர்வேச்வரபாவ !)

சத்ருவின் தம்பியான விபீஷணனும் வானரத்தங்களோடு சேர்த்துக் கொள்ளும் விஷயத்தில் சச்சரவிடும் வாநர முதலிகளின் பலவாறுன பேச்சுக்களிடையே தனது ஸர்வேச்வரத்வத்தை வெளியிட்டவனே !

(தன்னுடைய பரத்துவத்தை ·மனிதப்போர்வையில் இத்தனை நாளாக மறைத்துவைத்தவருக்கு வாநரஸேனையின் ஸந்தேஹத்தைப் போக்க வேண்டி வெளியிட வேண்டியதாயிற்று. இது - ''பிசாசாந்தாநவாந்ய க்ஷாந்'' என்றச்லோகத்தின் கருத்து.)

सकृत्प्रपन्नजनसंरक्षणदीक्षित ! ।। ४८ ॥

(ஸக்ருத்ப்ரபந்நஜநஸம்ரக்ஷணதீக்ஷித !)

உன் திருவடிகளடைகின்றேன் என்றொருக்காலுரைத்தவரை உய்விக்கும் உறுதிபூண்டவனே !

(இது ''ஸக்ருதேவப்ரபந்நாய...'' என்ற ச்லோகத்தின் ஸங்க்ரஹம்)

वीर ! ॥ ४९ ॥
(வீர ! .) உத்தமவீரனே !

(இந் நிலையில் எதிரிகளிடையிலே இருந்து வந்தவனை நிர்பயமாக ஸ்வீகரித்ததன்றோ பரமவீரம் என்று வியக்கிறது இந்த சூர்ணை.)

सत्यव्रत ! ॥ ५० ॥
(ஸத்யவ்ரத ! .)

ஸ்திரமான ப்ரதிஜ்ஞையை உடையவனே ! .

(விபீஷணனைக்காத்து தனது சரணாகதனைக்கைவிடேன் என்ற வரதத்தையும் பெருமாள் காத்துக்கொண்டார். அல்லது இப்போதே ராவணன் முடிந்ததாக நினைத்து விபீஷணனுக்கு லங்கா ராஜ்யத்தை வழங்கின உறுதி வெளிப்படுகிறது என்னவுமாம்.)

प्रतिशयनभूमिकाभूषित पयोधिपुलिन ! ॥ ५१ ॥

(ப்ரதிசயனபூமிகாபூஷிதபயோதி புளின.)

Koviloor Digital Library

உபவாஸத்துடன் ஸமுத்திரத்திற்கு எதிரே மற்ருெரு ஸமுத்ரம் போல் தான் கிடந்து கடற்கரைக்கு மிக்க அழ கூட்டியவனே !

(இங்கு - சிலர் ஸமுத்ர ராஜனைப் பெருமாள் சரணமடைந்தார் என்பர் ஸ்வாமியின் திருவுள்ளம் அதல்ல. பெருமாள் ப்ராயோபவேசம் தான் செய்தார்.

प्रळयशिखिपरुष विशिख शिखाशोषिताकूपारवारिपूर ! ॥ ५२ ॥

(ப்ரளயசிகிபருஷவிசிகசிகாசோஷிதாகூபாரவாரிபூர ! .)

ஊழிகாலத்தீபோல மண்டும் பாணுக்நியாலே ஸமுத்ரத்தின் வெள்ளத்தைவற்றவைத்தவனே ! .

(குரங்குகள் அலைகளாலே அணைகட்டினது வெறும் வ்யாஜமே. முன்பே ஸமுத்ர நீர் பெருமாளால் வற்றிப்போயிற்று என்று கருத்து.)

प्रबलरिपुकलहकुतुकचटुलकपिकुलकरतलतुलितहृतगिरिनिकरसाधितसेतु-पथसीमासीमन्तित समुद्र ! ॥ ५३ ॥

(ப்ரபலரிபுகலஹகுதுகசடுலகபிகுலகரதலதுலிதஹ்ருதகிரிநிகரஸாதித ஸேதுபதஸீமாஸீமந்திதஸமுத்ர !)

வரப்போகும் பெரும் பூசலில் குதூஹலம் கொண்டு சுறுசுறுப்பான குரங்குகள் மலையைப் பிடிங்கி தூக்கி வந்து போட நளன் ஸேது வழியை நிர்மாணிக்க ஸமுத்திரம் இருபிளவாகப் பிரிந்து நிற்கக்காரணமாயிருந்தவனே !

ரகுவீரனைப் பற்றிய :இந்த கத்யஸ்தோத்திரத்தில் - அவன் செய்த செயல்களையிட்டே அவனை அழைக்க வேண்டியிருக்க - யாரோ வாநர முதலிகள் செய்த அணையை இட்டு இவனை அழைக்கும் போது - அந்த செயலுக்கும் இவனே மூலகாரணம் 'என்று இவனோடு அதை ஸம்பந்தப் படுத்தி அழைக்கிருர். மேலும் இப்படியே கண்டுகொள்வது.)

द्रुतगतितरुमृगवरूथिनीनिरुद्धलङ्कावरोधवेपथुलास्यलीलोपदेशदेशिकधनुर्ज्याघोष ! ॥ ५४ ॥

(த்ருதகதிதரும்ருகவரூதினீ நிருத்தலங்காவரோதவேபதுலாஸ்யலீலோபதேசதேசிகதநுர்ஜ்யாகோஷ ! .)

Koviloor Digital Library

மிகுந்த சுறுசுறுப்புடைய வாநரஸேனைகளினாலே முற்றுகையிடப்பட்ட லங்கைப் பெண்ணினுடைய உடலுக்கு நடுக்கமெனும் ஒருவித நாட்டியத்தை மேலும் உபதேசிக்கவல்ல வில்லினுடைய நாணொலியை உடையவனே !.

गगनचरकनकगिरिगरिमधरनिगममयनिजगरुडगरुदनिललवगलितविषवदनशरकदन ! ॥ ५५ ॥

(ககநசரகநககிரிகரிமதரா நிகமமய நிஜகருடகருதநிலலவகலிதவிஷவதநசரகதந !.)

ஆகாயத்தில் பறந்து வரும் ஓர் பொன்மலையோ என்று எண்ணும் வண்ணம் தோன்றியதனது வேதாத்மாவாகிய வாஹநமான கருடாழ்வாருடைய இறகின் சிறு காற்றாலேயே நாகபாசபயம் நீங்கினவனே !.

अकृतचरवनचररणकरणवैलक्ष्यकूणिताक्षबहुविधरक्षोबलाध्यक्षवक्षः कवाटपाटनपटिमसाटोपकोपावलेप ! ॥ ५६ ॥

(அக்ருதசரவநசரரணகரணவைலக்ஷ்யகூணிதாக்ஷபஹுவிதரக்ஷோபலாத்யக்ஷவக்ஷ: கவாடபாடநபடிமஸாடோபகோபாவலேப !.)

முன்னாள் புணராத வாநரங்களுடன் போரைக்கண்டு வெட்கத்தினால் கண் கூசிய ராக்ஷஸத்தலைவர்களின் பலகை போல் விரிந்த மார்பைப் பிளக்கவல்ல பாணபாதங்களை கோபத்துடன் செய்கிறவனே !

कटुरटदटनिटङ्कृतिचटुलकठोरकार्मुक ! ॥ ५७ ॥
(கடுரடதடநிடங்க்ருதிசடுலகடொரகார்முக !.)

மிகக்கர்ணகடுரமாக சத்தமிடும் நாணை உடையவிருவிருப்பான கோதண்டமேந்தியகையனே !

विशङ्कटविशिखविताडनविघटितमकुटविह्वलविश्रवस्तनयविश्रमसमयविश्राणन विख्यातविक्रम ! ॥ ५८ ॥

(விசங்கடவிசிகவிதாடநவிகடிதமகுடவிஹ்வலவிச்ரவஸ்தநயவிச்ரமஸமயவிச்ராணன விக்யாதவிக்ரம !)

நிறைய பாணமழை பொழிந்து ராவணனுடைய முடியைக் கவிழ்த்து அவன் செயலிழந்து நின்றபோது - "இன்று போய் இளைப்பாறி நாளை வா என்று அவனுக்கு ஒய்வளித்த உதார வீரனே !.

Koviloor Digital Library

कुम्भकर्णकुलगिरिविदळन दम्भोळिभूतनिश्शङ्ककङ्कपत्र ! ॥ ५९ ॥

(கும்பகர்ண குலகிரிவிதளனதம்போளிபூதநிஸ்கங்கங்கபத்ர ! .)

கும்பகர்ணனாகிய பெருமலை சிதறிப்போம்படி பேரிடியன்ன பாணங்களைப் பொழிந்தவனே ! .

अभिचरणहुतवहपरिचरण विघटन सरभसपरिपतदपरिमित कपिबल जलधिलहरिकलकलरवकुपितमघवजिदभिहननकृदनुजसाक्षिकराक्षसद्वन्द्व युद्ध ! ॥ ६० ॥

(அபிசரணஹுதவஹபரிசரணவிகடநஸரபஸபரிபததபரிமிதகபிபலஜ லதிலஹரிகலகலரவகுபிதமகவஜிதபிஹநநக்ருதநுஜஸாக்ஷிகராக்ஷஸத்வந் த்வயுத்த ! .)

தனது அபிசாரவக்நி பூஜையைத் தடுக்க வேகமாக வந்து விழும் வாநரப் படையினுடைய கடலோசைபோன்ற கலகலப்பினாலே கோபம் கொண்ட இந்திரஜித்தைக் கொன்ற இளைய பெருமாள் ஸாக்ஷியாக ராக்ஷஸர் களோடுத் வந்த்வயுத்தம் செய்தவனே ! .

(முன்போல் இங்கும் இளையபெருமாளின் இந்திரஜித்வதம் பெருமாள் பேரில் இட்டு நிறப்பி ஏறிடப்பட்டது.)

अप्रतिद्वन्द्वपौरुष ! ॥ ६२ ॥

(அப்ரதித்வந்த்வபௌருஷ ! .)

இணையற்ற பராக்ரமசாலியே ! .

त्र्यम्बकसमधिकघोरास्त्राडम्बर ! ॥ ६२ ॥

(த்ரயம்பகஸமதிககோராஸ்த்ராடம்பர ! .)

ருத்திரனையும் விஞ்சிய கோரமான அஸ்த்ரங்களின் சிறப்பையுடையவனே

(ராமாயணத்தில் - இந்த திவ்யாஸ்தரபலம் எனக்கோத்ரயம்பகனுக் கோதானுண்டு - என்றதைச் சிறிது மாற்றி இப்படி அருளிச் செய்த படி. அங்கு மனுஷ்யபாவனையின் முதிர்ச்சியால் சிவனைத் தனக்கு ஸமமாக விகல்பித்துச் சொன்னதென்றும் - இங்கு கூறினதே உண்மை நிலை என்றும் கருத்து.)

Koviloor Digital Library

सारथिहृतरथसत्रप शात्रवसत्यापित प्रताप ! ॥ ६३ ॥

(ஸாரதிஹ்ருதரதஸத்ரபசாத்ரவஸத்யாபிதப்ரதாப ! .)

தனது ஸாரதி அபாயத்தை உணர்ந்து தேரை அப்புறப்படுத்திக் தன்னைக் காத்தற்கு வெட்கித் தலைகுனிந்த எதிரியின் கையாலேயே விடு தீட்டு வாங்கி உறுதி செய்யப்பட்ட உண்மையான பராக்ரமத்தை உடையோனே !

शितशरकृतलवन दशमुख मुखदशक निपतन पुनरुदयदरगलितजनितदर सरलहरिहयनयननलिनवनरुचिखचितनिपतितसुरतरु कुसुमवितति सुरभितरथ पथ ! ॥ ६४ ॥

(சிதசரக்ருதலவநதசமுகமுகதசகநிபதநபுநருதயதரகளிதஜநிததரதர ளஹரிஹயநயநநளிநவநருசிசிதநிபதிதஸுரதருகுஸுமவிததிஸுரபிதரத பத !)

தன்னுடைய கூர்மையான பாணங்களால் ராவணனின் பத்து தலைகளையும் அறுக்க - அவைகள் வீழ்வதும் முளைத்தெழுவதுமாய் இருக்க அதனால் இந்திரனுக்கும் பயம்போவதும் வருவதுமாய் இருக்க அவனுடைய ஆச்சரியத்தால் மலர்ந்த ஆயிரம் நேத்திரத்தாமரைகளின் வர்ணவீச்சுடன் கலந்து மந்தாரமலர்கள் மழைபொழிய - தேர் செல்லும் வழியெல்லாம் மணக்க இருந்த ஓ ராம !

अखिल जगदधिक भुजबलवरबलदशलपनलपन दशक लवनजनित कदन परवश रजनिचर युवति विलपनवचनसमविषयनिगमशिखरनिकरमुखरमुख मुनिवर परिपणित ! ॥ ६५ ॥

(அகில ஜகததிக புஜபலவரபலதசலபநலபநதசகலவநஜநிதசதநபரவ சரஜநிசரயுவதிவிலபநவசநஸமவிஷய நிகம சிகரநிகரமுகரமுகமுநிவரபரி பணித ! .)

அனைத்துலகத்திலும் மிகுந்த புஜபலமும் வரபலமும் உடைய ராவணனுடைய தலை பத்தையும் ஒரு கொத்தென தான் வெட்டித்தள்ள அந்த துக்கத்தினால் தன்வயமிழந்து மந்தோதரி புலம்பும் போது - மற்றொருபுறம் அவள் வார்த்தைகளுக்குச் சமமான பொருள் உள்ள உபநிஷத்துக்களை உத்கோஷித்துக் கொண்டு ரிஷிகளின் கூட்டத்தினாலும் துதிக்கப்பட்டவனே ! .

Koviloor Digital Library

(மந்தோதரியின் வார்த்தைகள் உபநிஷத்துக்களைப் போல் பரம்பொருளை நன்கு விளக்கிராமனுகத்துதிக்கின்றவையாய் அமைந்தனவே அல்லது தனது பர்த்தாவைக் கொன்றவனென்று துளியும் ராமனை வெறுப்பவைகளாய் அமையவில்லை என்று கருத்து)

अभिगतशतमखहुतवहपितृपतिनिरृति वरुणपवनधनद गिरिशप्रमुखसुरपति नुतिमुदित ! ॥ ६६ ॥

(அபிகதசதமகஹுதவஹ பித்ருபதி நிருதிவருணபவநதநத கிரிசப்ரமுகஸுரபதிநுதிமுதித !)

இந்திரன் அக்கி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் ருத்திரன் முதலிய தேவச்ரேஷ்டர்கள் வந்து துதிக்க நின்றவனே ! .

अमितमति विधिविदित कथित निज विभवजलधिपृषत लव ! ॥ ६७ ॥

(அமிதமதிவிதிவிதிதகதித நிஜவிபவ ஜலதிப்ருஷதலவ !)

தனது அபாரமானஞாநத்ருஷ்டியால் ப்ரம்மா சொன்ன அத்தனைப் பெருமைகளும் இவனுடைய மஹிமைக்கடலின் ஒரு துளிதான் என்னும் படியான உயர்வற உயர்நலமுடையவனே ! .

विगतभय विबुधविबोधित वीरशयनशायितवानरपृतनौघ ! ॥ ६८ ॥

(விகதபயவிபுதவிபோதிக வீரசயநசாயிதவாநரப்ருதனௌபக !)

தேவர்கள் பயம் தீர்ந்து ஸந்தோஷம் கொண்டு வீரசயனத்தில் (போர்க்களத்தில்) இறந்து வீழ்ந்து கிடக்கும் வாநரர்களை எல்லாம் விழித்தெழச் செய்யும்படி அவர்களுக்கு உபகரித்தவனே !

இங்கும் முன்போல் தேவர்களுடைய இச்செயல் பெருமாள் பேரில் வலித்துக்தருவிக்கப்பட்டது.

स्वसमय विघटित सुघटित सहृदय सहधर्मचारिणीक ! ॥ ६९ ॥

(ஸ்வஸமயவிகடிதஸுகடிதஸஹ்ருதயஸஹதர்மசாரிணீக !)

தங்கள் ஸங்கேதப்படி இத்தனை நாள் பிரிந்திருந்த பிராட்டி இப்போது மனவுவப்போடு வந்து கூட அவளை ஏற்று ஸஹதர்மசாரிணியாக்கினவனே ஸீதாராம ! .

Koviloor Digital Library

(பிராட்டி முன்பு பெருமாளை விட்டுப்பிரிந்ததும் இப்போது வந்து கிட்டினதும் தங்களை மீறின ஒரு தெய்வச்செயலாலன்று நமக்கு நடப்பது போல். பின்னை - அவர்களே தெய்வமாகையால் இது எல்லாம் அவர் களுக்கு ஒரு லீலாவிநோதத்தின் பொருட்டான ஒரு ஸங்கல்பமே என்று கருத்து)

विभीषणवशंवदीकृतलङ्कैश्वर्य ! ॥ ७० ॥

(விபீஷணவசம்வதீக்ருதலங்கைச்வர்ய ! .)

ஸமஸ்தலங்காராஜ்யத்தையும் விபீஷணனிட்டவழக்காக்கினவனே ! .

निष्पन्नकृत्य ! ॥ ७१ ॥

(நிஷ்பந்நகக்ருத்ய ! .)

இப்படி எல்லாம் செய்து தனது அவதாரப்ரயோஜனம் தலைக் கட்டப் பட்டப்பட்டவனே !

ஆசாரியன் இங்கு :ராவண ஸம்ஹாரம் ஆனதும் இப்படி அருளிச் செய்யாமல் விபீஷண பட்டாபிஷேகம் ஆனதும் இவ்விதம் கூறினபடியால் இதுவே பெருமாள் திருவுள்ளப்படி அவனது அவதாரப்ரயோஜனம் என்று தேரும் பெருமாள் பட்டாபிஷேகமும் இவ்விதமே முக்யமல்ல ஸாது பரித்ராணத்திற்காகவன்றோ அவன் அவதரிக்கின்றான்.)

खपुष्पितरिपुपक्ष ! ॥ ७२ ॥

(கபுஷ்பிதரிபுபக்ஷ !)

ஆகாயத்தாமரைபோல் விரோதிகள் என்று ஒருவரும் அடியோடு இல்லாதபடி செய்தவனே !

(பல விரோதிகள் சண்டையில் மாண்டனர். மிச்சமிருந்த ராக்ஷஸர் களும் தங்களுக்கு அரசனாக விபீஷணாழ்வான் வந்துவிட்டபடியால் அவரு டைய உபதேசத்தைக்கேட்டு தாங்களாகவே மனம் மாறிவிட்டனர். ஆக எல்லாம் - ராமபூதம் ஜகதபூத் - என்றபடி பெருமாள் - பக்ஷமே வந்து விட்டன - என்று கருத்து.)

पुष्पकरभसगति गोष्पदीकृतगगनार्णव ! ॥ ७३ ॥

(புஷ்பக ரபஸகதிகோஷ்பதீக்ருதககநார்ணவ ! .)

புஷ்பகவிமானம் ஏறி வேகமாகக் கடல் போன்ற ஆகாயத்தைக் கடந்தவனே.

Koviloor Digital Library

(திருவடி தன் பலத்தால் கடலைக்கடந்தார். பெருமாள் விமானத்தால் ஆகாயத்தைக் கடந்தார் என்று கருத்து.

प्रतिज्ञार्णवतरणकृतक्षणभरतमनोरथसंहितसिंहासनाधिरूढ ! ॥ ७४ ॥

(ப்ரதிஜ்ஞார்ணவதரணக்ருதக்ஷண பரதமநோரதஸம்ஹிதஸிம்ஹாஸநாதிரூட !)

தன்னுடைய ப்ரதிஜ்ஞைக் கடலைக் கடக்கக் காத்திருந்த பரதன் மநோரதம் நிறைவேறி அவன் மநோரதம் என்றும் ஸிம்மாஸநத்தில் வீற்றிருந்தவனே !.

(இவ்விருவரும் ஒவ்வொரு விதமாக கடலைக் கடந்ததுபோல் பரதாழ்வானும் தனது தீவ்ரமான ப்ரதிஜ்ஞைக் கடலைக்கடந்தார். அவர் மநோரதமும் ஒருபடி முடிந்தது. அக்கணமே பெருமாளுக்கு மனதால் பட்டத்தில் அபிஷேகமும் செய்துவிட்டார். பிறகு நல்ல நாள் பார்த்து நடந்தது நாட்டாருக்காக என்று பொருளிங்கு தொனிக்கும்.

स्वामिन् ! ॥ ७५ ॥

ஸ்வாமிந் !.) அகிலலோக ஸ்வாமியே !

(பிறகு சட்டப்படி அபிஷேகம் நடந்து - இவர் வெண்கொற்ற குடையின்கீழ் எல்லா ராஜ்யங்களும் வந்துவிட்டன என்கிறது இங்கு.)

राघवसिंह ! ॥ ७६ ॥

(ராகவஸிம்ம !.) (சிம்மாசநமேறியபடியால்) ரகுவம்சத்தரசர்களுள் ஸிம்மத்திற்கொப்பானவரே !

हाटकगिरिकटकलडह पादपीठ निकटतटपरिलुठितनिखिलनृपतिकिरीटकोटिविविधमणिगणकिरणनिकर नीराजितचरणराजीव ! ॥ ७७ ॥

(ஹாடககிரி கடகலடஹபாதபீட நிகடதட பரிலுடித நிகிலந்ருபதி கிரீடகோடி விவிதமணிகண கிரண நிகரநீராஜித சரண ராஜீவா !.)

பொன்மலையின் தாழ்வரைபோல வழகிய தன்னுடைய பாதபீடத்தின் அருகே தலைதாழ்த்தி வணங்குகிற நாநாதேசத்தரசர்களின் மணிமுடியின் ரத்தினங்களுடைய ஒளிகளாலே ஆரத்தி வழிக்கப்பட்ட திருவடித்தாமரையை உடையவனே !.

Koviloor Digital Library

दिव्यभौमायोध्याधिदैवत ! ॥ ७८ ॥

(திவ்யபௌமாயோத்யாதிதைவத !)

வைகுந்தவாஞடாகிய அயோத்தியோடு இவ்வுலகில் நற்பாலயோத்தியையும் ஆண்டபேரரசசே !

पितृवधकुपित परशुधरमुनि विहितनृपहननकदन पूर्वकालप्रभव शतगुण प्रतिष्ठापितधार्मिक राजवंश ! ॥ ७९ ॥

(பித்ருவதகுபித பரசுதர முநிவிஹித ந்ருபஹநந கதந பூர்வகால ப்ரபவ சதகுண ப்ரதிஷ்டாபித தார்மிக ராஜவம்ச !) .

தனது தகப்பஞரைக் கொன்றதால் கோபடைந்த பரசுமுனிவன் வெட்டி வீழ்த்திய ராஜவம்சங்களை எல்லாம் முன்னிலும் நூறு மடங்காக தர்மசிந்தையுடன் கூடியவர்களாக ஸ்தாபித்தருளியனே !

शुभचरितरतभरतखर्वित गर्वगन्धर्वयूथगीत विजयगाथाशत ! ॥ ८० ॥

(சுபசரித ரதபரதகர்வித கர்வகந்தர்வ யூதகீத விஜயகாதாசத ! .)

கல்யாண சரித்ரஞன பரதாழ்வாஞல் கர்வம்தணிந்த கந்தர்வர் குழாமெல்லாம் பாடின பெருமையுடையோனே !

शासितमधुसुतशत्रुघ्नसेवित ! ॥ ८१ ॥

(சாஸித மதுஸூத சத்ருக்ந ஸேவித ! .)

மதுவின் பிள்ளையான லவணஸுரனை சிக்ஷித்த சத்ருக்நாழ்வான் சேவிக்க நின்றவனே ! ராம !

(பகவதவதாரங்கள் எல்லாம் - பரித்ருணய ஸாதூநாம், விநாசாய சதுஷ்க்ருதாம் - என்றபடியில் சத்ருஸம்ஹாரத்துக்காகவும் ஏற்பட்டதால் பரதசத்ருக்நர்களும் ப்ராப்தமான காலங்களில் இது செய்து அவதார க்ருதயம் நிறைவேற்றிஞர்கள் என்று கருத்து.)

कुशलव परिगृहीत कुलगाथाविशेष ! ॥ ८२ ॥

(குசலவ பரிக்ருஹீத குலகாதாவிசேஷ !)

திருக்குமாரர்களான குசலவர்கள் கற்ற குலப்பெருமை பாடும் ராமாயண காதையை உடையவனே ! உத்தம !

Koviloor Digital Library

(மேலே பெருமாள் தனது சரிதையைத் தானேகேட்பது அவருடைய பெருமைக்குக் கொற்றையாகுமே என்ற ஆக்ஷேபமிங்கு தலை சாய்க்கப் பட்டது. அவர் தனது பெருமையைக் கேட்கவில்லை. தனது குலப்பெருமையைத்தான் கேட்டார் என்று சமாதானம்.

विधिवशपरिणमदमरभणिति कविवररचित निज चरितनिबन्धन निशमन निर्वृत ! ॥ ८३ ॥

(விதிவசபரிண மதமரபணிதி கவிவர ரசிதநிஜசரித நிபந்தநநிசமன நிர்வ்ருத ! .)

நான்முகனின் அநுக்ரஹத்தால் 'சனிந்துவந்த வடமொழி வல்லவரான வால்மீகி முனியால் வரையப்பட்ட ராமாயண மஹாகாவியத்தைக் கேட்டு மகிழ்ந்தவனே !

सर्वजन सम्मानित ! ॥ ८४ ॥

(ஸர்வஜ நஸம்மானித ! .)

ஸர்வப்ரஜைகளும் ஈடுபடும் ஈடு இணையற்ற குணக்கடலே !

पुनरुपस्थापित विमानवरविश्राणन प्रीणित वैश्रवण विश्रावित यशः प्रपञ्च ! ॥ ८५ ॥

(புநருபஸதாபித விமாநவர ப்ரீணிதவைச்ரவண விச்ராவிதயச : ப்ரபஞ்ச ! .)

புஷ்பகவிமானத்தின் சொந்தக்காரனான குபேரனுக்கே அவ்விமானத்தைத் திருப்பித்தந்து – அதனால் உகந்து அவன் பாடநின்ற பெருமை பெற்றவனே ! .

पञ्चतापन्नमुनिकुमारक सञ्जीवनामृत ! ॥ ८६ ॥

(பஞ்சதாபந்ந முநிகுமாரஸஞ் சீவஹம்ருத ! .)

மரணமடைந்த முநிகுமாரனை மீண்டும் பிழைக்கவைத்த நச்சுமா மருந்தே !

त्रेतायुगप्रवर्तितकार्तयुगवृत्तान्त ! ॥ ८७ ॥

(த்ரேதாயுக ப்ரவர்த்தித கார்த்தயுகவ்ருத்தாந்த ! .)

க்ருதயுகத்தின் உத்தம தர்மங்களை த்ரேதாயுகத்திலும் உண்டாக்கினவனே ! .

Koviloor Digital Library

अविकलबहुसुवर्णहयमखसहस्रनिर्वहणनिर्वर्तितनिजवर्णाश्रमधर्म ! ॥ ८८ ॥

(அவிகலபஹுஸுவர்ண ஹயமகஸஹஸ்ர நிர்வஹண நிர்வர்த்தித நிஜவர்ணாச்சரமதர்ம ! .)

விதிவழுவாமல் பொன்னை வாரியிறைத்து ஆயிரம் அச்வமேதயாகம் நடத்தி தன்னுடைய வர்ணாச்ரமதர்மங்களைப் பரிபாலித்தவனே !

सर्वकर्मसमाराध्य ! ॥ ८९ ॥

(ஸர்வகர்மஸமாராத்ய !)

உலகில் செய்யும் புண்ணியகர்மாக்களால் ஆராதிக்கப்படும் அந்தர்யாமியே !

(இவனை உகப்பிக்கவே உலகில் புண்ணியங்கள் செய்ய விதிக்கப்டுள்ளன. அப்படிபுள்ளபோது - இவன் யாரை உகப்பிக்க யாகங்கள் செய்தானோ ? என்ன மனுஷ்யபாவனை (இது ? என்றும் வியக்கிறார் ஸ்வாமி.)

सनातनधर्म ! ॥ ९० ॥

(ஸநாதநதர்ம !)

(புண்யகார்யங்கள் நிலை நில்லாத தர்மங்கள்) நீயொருவனே நிலையான நித்ய தர்மஸ்வரூபீ ! .

साकेत जनपद जनिधनिकजङ्गमतदितर जन्तु जातदिव्यगतिदान दर्शित नित्यनिस्सीमवैभव ! ॥ ९१ ॥

(ஸாகேத ஜநபத ஜநிதநிக ஜங்கமததிரஜந்துஜாத திவ்யகதி தாநதர்சித நித்யநிஸ்ஸீமவைபவ ! .

நற்பாலயோத்தியில் பிறந்து படைத்த பெருமையுடைய ஜங்கமஸ்தாவர ராசிகளையணைத்தையும் தன்னுடன் தன்னுடைச் சோதிலோகத்துக் கழைத்துச்சென்று தன்னுடைய பரந்த பெருமையை உலகுக்கு வெளியிட்டோனே ! .

भवतपनतापित भक्तजन भद्राराम ! ॥ ९२ ॥

(பவதபநதாபித பக்தஜநபத்ரா ராம ! .)

ஸம்ஸாரவெக்காயம் தாளாத ஜநங்களுக்கு கோடையிலும் குளிர்தரும் கற்பகக்காவே ! .

Koviloor Digital Library

श्रीरामभद्र ! ॥ ९३ ॥

(ஸ்ரீராமபத்ர !) ஸ்ரீராமபத்ரனே !

नमस्ते पुनस्ते नमः ! ॥ ९४ ॥

(நமஸ்தே புநஸ்தே நம:.) உன்தனக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்.

चतुर्मुखेश्वरमुखैः पुत्र पौत्रादिशालिने ॥
नमस्सीता समेताय रामाय गृहमेधिने ॥ १ ॥

(சதுர்முகேச்வர முகை: புத்ரபௌத்ராதி சாலிநே !!

நமஸ்ஸீதாஸமேதாய ராமாயக்ருஹமேதிநே !!

நான்முகன் பிள்ளை – சிவன்பேரன் என்ற குலக்ரகத்தையுடையவனும் ஸீதாபிராட்டியாம் பத்நியுடன் எக்காலத்தும் இல்லறம் நடத்துபவனும் ஆன ராமபத்ரனை நான் வணங்குகிறேன்.

(இங்கு ராமாவதார ஸமாப்தியானபடியால் பெருமாளின் இல்லறம் குலைந்ததோ என்று நினையாதபடி அவனை நித்யகுடும்பியாக ஸ்வாமி சித்திரிக்கிறார்.

कविकथक सिंहकथितं कठोरसुकुमारगुम्भगम्भीरम् ॥
भवभयभेषजमेतत् पठत महावीरवैभवं सुधियः ॥ २ ॥

(கவிகதகஸிம் மகதிதம்கடோரஸுகுமார கும்பகம்பீரம் !!

பவபயபேஷஜமேதத் படதமஹாவீரவைபவம் ஸுதிய : !! !!

கவிகளுள்ளும் தார்க்கிகளுள்ளும் தலைசிறந்த என்னால் இயற்றப்பட்டு வன்மையும் மென்மையும் ஒருங்கே பொருந்திய சொற்பொருள் செறிவுடன் விளங்கும் இந்த மஹாவீர வைபவத்தை - நுண்மதிவாய்ந்த மாந்தர்களே ! நீங்கள் ஸம்ஸார நோய்க்கு அருமருந்தென்று ஆதரித்துப் பருகுங்கள். ஆனந்தமடைவீர்கள்.

कवितार्किकसिंहाय कल्याणगुणशालिने ॥
श्रीमते वेङ्कटेशाय वेदान्त गुरवे नमः ॥ ॥

(கவிதார்க்கிகஸிம்மாய கல்யாண - குணசாலிநே !!
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம : !! !!